[1993 மார்ச் 23

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 145, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை.

வினா எண். 146, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

146—

மது மற்றும் போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கு அக்குபங்ச்சர் சிகிச்சை முறை.

* 9658—திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

மது அடிமைகளையும், போதை மருந்து அடிமைகளையும் மீட்க அக்குபங்ச்சர் (Acupuncture) சிகிச்சை முறையை அரசு அறிமுகப்படுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ ரவர்களே,

அக்குபங்ச்சர் முறை—வைத்திய முறை அரசு மருத்துவ மனைகளிலே தற்போது நடைமுறையிலே இல்லாத காரணத்தால் மது மற்றும் போதை மருந்து அடிமைகளுக்கு—அடிமை யானவர்களுக்கு இச்சிகிச்சை செயல்படுத்தப்படுவதில்லை.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகக் கொடுமைகளையும், சமூகச் சீர்கேடுகளையும் அடியோடு களைந்தெறிய இன்றைக் குப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த மது மற்றும் போதை மருந்துகளுக்கு அடிமை யானவர்களை நெறிமுறைப்படுத்தவும், அவர்கள் அந்த பழக்கத்திலிருந்து மீளவும் செலவு அதிகம் இல்லாத இந்த அக்குபங்ச்சர் முறையை நம்முடைய மாவட்டத் தலைமை யகங்களிலே உள்ள மருத்துவமனைகளில் கொண்டு வந்து அவர்களுடைய வாழ்வை நல்வாழ்வாக்கும் முயற்சியிலே அமைச் சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்த முறை நம்மிடத்திலே இல்லை. இப்பொழுது புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்காகத் தனியாக மருத்துவர்களையெல்லாம சேர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எவ்வளவு பேர் இப்படி அடிமையாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் கணக்கெடுத்துத்தான் அதை செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே அரசினுடைய சார்பாக அரசு மன நல காப்பகத்தில்—கீழ்ப்பாக்கிலே இருக்கிற அந்த மருத்துவமனையிலே இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டு பலபேருக்கு அதிலே சிகிச்சையும் கொடுக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, 1991-ஆம் ஆண்டு 770 பேர் அதிலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். 693 பேர் குணமடைந்து திரும்பிச் சென்றிருக்கிறார்கள். 1992-ஆம் ஆண்டிலே குடிப்பழக்கத்திலே அடிமையானவர்கள் 602 பேர் சிகிச்சை பெற்று 349 பேர் குடிபழக்கத்திலேயிருந்து விடுபட்டு திரும்பிச் சென்றிருக்கிறார்கள். போதை மருந்துக்கு அடிமையானவர்கள் 542 பேர் சிகிச்சைக்கு வந்திருக்கிறார்கள். 209 பேர் அதிலே விடுபட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே இப்பொழுது இங்கே இந்த மருத்துவ மனையிலே இது நடைமுறையிலே இருக்கிறது.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வாணியம்பாடியில் டாக்டர் அக்பர் ஹவுசர் என்பவர் மது மற்றும் போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கு அந்த அக்குபஞ்சர் சிகிச்சை முறையை கொண்டு வந்திருக்கிறார்கள். அவர் அதற்காக ஒரு எளிய கருவியையும் மிகக் குறைந்த விலையில் வாங்கக்கூடிய ஒரு கருவியையும் கண்டுபிடித்து, ஏழை எளியவர்களுக்கு இலவசமாகக் கூட அந்த சிகிச்சையை அளித்து வருகின்றார்கள். அதை, இந்த மதுக் கொடுமைகளையும், போதை மருந்துக் கொடுமைகளையும் சமுதாயத்திலே எடுத்துக் கூறுவதற்காகக் கூட அவர் பல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள். அவரைப் பயன்படுத்தி, நாம் இப்பொழுது நம்முடைய அரசிலே பட்டதாரிகளை இந்த மதுக் கொடுமைகளைப் பிரச்சாரம் செய்வதற்காக நியமிப்பத்திருப்பதாக நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவர்களை இந்த டாக்டரிடம் அனுப்பி பயிற்சி பெறச் செய்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் அவர்கள் மூலமாக இந்தச் சிகிச்சை முறையைக் கொண்டுவந்தால் இந்த மாநிலத் தலைநகருக்கு—சென்னைக்கு வந்து சிகிச்சை பெற முடியாதவர்கள் அந்த அந்த மாவட்டத்திலேயே சிகிச்சை பெற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் இருக்கின்ற அந்த மருத்துவரைப் பற்றி இதுவரையிலும் எங்களுக்கு தகவல் இல்லை. அந்த விலாசத்தை அவர்கள் கொடுத்து விட்டால் அவரை அழைத்து இதைப்பற்றி நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். அடுத்து அந்தந்த மாவட்டத்திலேயே அவர்கள்—அந்த மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் எந்த இடத்திலே இருக்கிறார்களோ அங்கேயே இந்த வசதிகள் அமைக்கப்பட வேண்டுமென்று நீங்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறீர்கள். இதிலே இருக்கின்ற பிரச்சினையே என்னவென்று சொன்னால், இந்த ட்ரீட்மெண்டுக்காக வருகின்றபொழுது அந்தச் சுற்றுவட்டாரப் பழக்கத்தை விட்டு விட்டு வந்தால்தான் அதிலேயிருந்து விடுபட முடியும். காரணம், இந்த மருத்துவமெல்லாம் செய்து அவர்களை வீட்டுக்கு அனுப்பினால், அங்கே சுற்றியிருப்பவர்கள் அவரோடு சேர்ந்து எப்பொழுதும் குடித்துக் கொண்டிருப்பவர்கள் மீண்டும் சேர்ந்தால் டாக்டரை மறந்து அவர்கள் அவர்களோடு சேர்ந்து விடுவார்கள். எனவேதான் வெளியிலே வர வேண்டும் என்று நாங்கள் இங்கே வைத்திருக்கிறோம். எனவே அதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்து பார்க்கலாம்.

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'குடி குடியைக் கெடுக்கும்'; அதுமட்டுமல்ல, குடித்தவன் வீட்டிலுள்ள பெண்களை, வருபவன், போகிறவன் எல்லோரையும், அடிக்கிறான். சான்றோர்கள் சொன்னாலும் சரி, பெரியவர்கள் புத்திமதி சொன்னாலும் சரி, இந்தக் குடிகாரன் கேட்பதே கிடையாது. 'ஒளிவிளக்கு' படத்தில் புரட்சித் தலைவர் குடிகாரனைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுவார்; ''தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா?'' என்று. அப்படிப் பாடியும் குடிகாரன் திருந்த மாட்டேன் என்கிறான். புரட்சித் தலைவி முதலமைச்சர் டாக்டர் ஜெயலலிதா அவர்கள் இதே சட்டசபையில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: கேள்விதான். இது கேள்விக்குள் தான் வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து படம் எடுத்து—குடிகாரர்களுக்கு விளக்குவதற்காக ஒரு படம்

1993 மார்ச் 23]

எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் படத்திலே எனக்கு முக்கியமான ஒரு வேடம் கொடுக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல; நாம் எல்லாம் தந்தை பெரியார் வழியில் வந்தவர்கள். ** என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். எனவே, அதையெல்லாம் மூடிவிட்டு கள்ளுக் கடைகளைத் திறக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய கொள்கையை திரு. தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய சௌகரியத்திற்கு மாற்றிக்கொள்ளக்கூடாது என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் அப்படிச் சொல்லவில்லை. இங்கே நல்ல பல அரிய கருத்துக்களை தாமரைக்கனி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது நிச்சயமாக அவருடைய வாயிலாக இந்த நாட்டு மக்களுக்குப் போவது மிகப் பொருத்தமாக, சிறப்பாக இருக்கும். இதை வெற்றிகரமாக..... (குறுக்கீடு) சரி; நீங்கள் சொன்னதை, என்னுடைய சார்பாக நான் பொதுமக்களுக்கு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்ன அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளலாம். புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்திருக்கிற அந்த நல்ல திட்டத்திற்கு, பொதுமக்கள் நல்ல ஆதரவைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே, அவருக்கு வேடம் கொடுக்கப்படுமா, என்ன என்பதைப் பற்றி தனியாக புரட்சித் தலைவி அவர்களிடத்திலே அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியிலே அதெல்லாம் வேண்டாம்; தவறாகச் சொன்ன கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அக்குபஞ்சர் முறை யானது நம்முடைய இந்தியாவிலே குறிப்பாக மருத்துவக் கல்லூரிகளிலே கற்றுத் தரப்படுவதில்லை. போதை மருந்து அடிமைகளையும், மதுப் பழக்கத்திற்கு அடிமையாக உள்ளவர்களையும், 'அலோபதி' மருந்துகள் மூலமாக குணப் படுத்துவதற்கு குறிப்பிட்ட அளவு மருந்துகள் இருந்தாலும் இந்த அக்குபஞ்சர் மற்றும் இதுபோன்ற ஹிபினோதெரபி என்று சொல்லக்கூடிய alternative medical subject இல் பல வழிகள் இருக்கின்றன. இந்த சப்ஜெக்டுகள் வெளிநாடுகளிலே உள்ள மருத்துவக் கல்லூரிகளிலே கட்டாயப் பாடமாக இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டிலே, அது கட்டாயப் பாடமாக, மருத்துவக் கல்லூரிகளிலே இல்லை. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விக்கு வாருங்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : 'ஹிபினோதெரபி' போன்ற alternative Subjects -கள் மருத்துவக் கல்லூரிகளிலே ஒரு பாடமாக அமைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு தனியாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே இருக்கிற முறை களை முறையாகக் கற்று, அவர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்தால் சிறப்பாக இருக்கும். புதிதாக என்னென்ன பாடத் திட்டங்களைச் சேர்க்கலாம் என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்யலாம். அதே சமயத்தில் இப்போது அக்குபஞ்சர் முறையை நாம் கொண்டு வந்தாலும்கூட யார் யார் விரும்பி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் நாம் செய்ய முடியும். சிலபேர் அந்தப் பக்கமே வராமல் முடி வெடுத்து, அவர்கள் வெளியிலே அந்த வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்களேயானால் அரசாங்கம் ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே, அவர்களை 'மோடிவேட்' செய்ய வேண்டும் என்பதுதான் இதிலே இருக்கிற முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, மனநல மருத்துவமனைகளிலே,

போதைக்கு அடிமையானவர்களுக்கும், மது குடிப்பவர்களுக்கும் மருத்துவம் வழங்குவதாகவும், அதில் நல்ல பலன் இருப்பதாகவும் கூறினார்கள். இத்தகைய சிகிச்சை அதாவது; 'ஹிப்னாடிசம்' பண்ணுகிறார்களா ? அல்லது மருந்துகள் ஊசிகள் மூலம் செலுத்தி சிகிச்சை அளிக்கிறார்களா என்பதைத் தெரிவிக்க முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தைப் பொறுத்தவரை, அவர்களை அங்கே கொண்டுவந்து வைத்து, அறிவுரைகளின் மூலமாகத்தான் அவர்களைத் திருத்துகிறார்கள். மருந்து முக்கியமல்ல; அவர்களுடைய குணம் மாறவேண்டும் என்பதுதான் அதிலே மிகவும் முக்கியம்; அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

<u>திரு. த. க. இராதாகிருஷ்ணன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மது அடிமைகள் மற்றும் போதை மருந்து அடிமைகள் புனர் வாழ்வுக்காக கண்டிப்பாக மாவட்டத் தலைநகரங்களில் De Addication Centre ஆரம்பிக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கு நான் ஏற்கனவே சொன்னேன். அதுபற்றி தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், நிறைய அதிலே (Financial implication) இருக்கிற காரணத்தினால், அது தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> வினா எண். 147, திரு. கோ. காளன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS